[1975 அக்டோபர் 27

Television Training in Film Institute

* 83 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to introduce Television Training at the Film Institute at Adyar in Madras City; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) ஆம்.

(இ) இதுபற்றிய விவரங்கள் ஆய்வில் உள்ளன.

திரு. என். கே. பழனிசாமி: சார், டெலிவிஷன் வந்த பிறகும் இதுமாதிரி பயிற்சி கொடுப்பதற்கு பரிசீலிப்பதற்கு என்ன காரணம்? இன்னும் பரிசீலனையில் இருக்கிறது என்று சொல்வதற்கான காரணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, திரைப்பட இயல் நிறுவன வளர்ச்சிக்காக டெலிவிஷன் பாட முறை தொடங்குவதுபற்றி திட்டத்திலே நாம் ஏற்கனவே சேர்த்திருக்கிறோம். அதற்கு கல்வித்துறை ஏற்கனவே ஒப்புதல் வழங்கியுள்ளது. அதைப்பற்றி முடிவு செய்ய முதலமைச்சர் தலைமையிலுள்ள ஆலோசனைக் குழு முடிவெடுக்கவேண்டும். 11—10—1972 ஆம் நாளன்று நடந்த ஆலோசனைக் குழுவில், இந்தப் பாடத் திட்டத்தைத் தொடங்கலாமா என்பதுபற்றி ஆராய்ந்து முடிவெடுக்காமல் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தக் குழு கூடி இந்தப் பாடத்திட்டத்தைத் தொடங்குவதுபற்றி முடிவெடுக்கும்.

திரு. எம். தேவராசன்: தலைவரவர்களே, தொலைக்காட்சி சம்பந்தமான பயிற்சி வகுப்பு எப்பொழுது தொடங்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப்போல சென்னையில் டெலிவிஷன் நிலையம் தற்பொழுது செயல்பட ஆரம்பித்துள்ளது. 1972 ஆம் ஆண்டில்தான் இந்தப் பாடத் திட்டம் சம்பந்தமாக ஏற்கனவே யோசிக்கப்பட்டு, டெலிவிஷன் எப்பொழுது சென்னைக்கு வரும் என்ற உறுதியான நிலைமை இல்லாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும் இப்பொழுது டெலிவிஷன் நிலையம் சென்னையில் செயல்பட ஆரம்பித்திருப்பதால் வெகு சிக்கிரத்திலேயே

1975 அக்டோபர் 27]

ஆலோசனைக் குழுவில் அதைப்பற்றி முடிவெடுத்து திரைப்பட பிரிவுகளில் இந்த டெலிவிஷன் சம்பந்தமான பட்டப்படிப்பைத் தொடங்க ஒரு முடிவை மேற்கொள்ள வேண்டிய நிலைமையிலிருக் கிறோம்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, திரைப்படக் கல்லூரியில் போதுமான மாணவர்கள் கலந்துகொள்ளவில்லை, சேர வில்லை என்ற குறைபாடு இருக்கிறதே, அது உண்மையா? அப்படி யானால் அதை நிவர்த்திக்க அரசு ஏதாவது நடவடிக்கைகளில் ஈடு பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, அது பற்றிய தகவல் இல்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், இந்த பட ரேடியோக்கள் சம்பந்தமாகப் பயிற்சி கொடுப்பதற்கு முன்னாலே, பட ரேடியோக் கள் சென்னையிலே அதிகமாக வாங்கப்பட வேண்டுமென்பதற்காக அதன் விலைகளைக் குறைப்பதற்கு அரசு ஏதேனும் சிபார்சு செய் திருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, மத்திய அரசுதான் அதற்குக் கருணை காட்ட வேண்டும்.

அரிசனங்களுக்கு வீடுகள்

*84 வினா—**திரு. எம். முத்தையா** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகத்தால் அரிசனங்களுக்கு 1974-75 ஆம் ஆண்டுக்கான திட்டத்தில் எத்தனை கிராமங்களில் வீடு கட்டும் திட்டம் உள்ளது?

(இ) அதற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. என். இராசாங்கம் : (அ) முதல் கட்டத்தில் 23 கிராமங்களும் இரண்டாவது கட்டத்தில் 22 கிராமங்களும் வீடுகள் கட்டுவதற்கு அரிசன வீட்டுவசதி மேம்பாட்டு கழகத்தால் திருநெல்வேலி மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

(இ) முதல் கட்டத்தில் ரூ. 28 லட்சங்களும் இரண்டாவது கட்டத்தில் ரூ. 24 லட்சங்களும் செலவாகுமென உத்தேசமாக குறிப்பிடப்பட்டுள்ளது.